

அலகு 3

# சக்தியின் பயணம்



**நீங்கள் கற்க இருப்பவை**

- ❖ போக்குவரத்தின் வகைகள்
- ❖ சாலைப் பாதுகாப்பு

## சாலை வழிப் போக்குவரத்து

சக்தி, அவனுடைய அப்பா, அம்மா, சகோதரிகள் கயல், கவிதா ஆகியோருடன் திருச்சியில் வசித்து வருகிறான். இவர்கள் விடுமுறையில் சென்னைக்கு சுற்றுலா செல்லத் திட்டமிட்டனர். அவர்கள் தொடர்வண்டியில் பயணிக்க தொடர்வண்டி நிலையம் செல்ல வேண்டும்.

E4H12Q

*சக்தி:* நாம் தொடர்வண்டி நிலையத்திற்கு எவ்வாறு செல்வது?

## பல்வேறு சாலை போக்குவரத்து வாகனங்கள்

**பேருந்து**



எரிபொருள் தேவை. 50க்கும் மேற்பட்டோர் பயணிக்கலாம்.

**மகிழுந்து**



எரிபொருள் தேவை. ஐந்து பேர் வரை பயணிக்கலாம்.

**மூவுருளி (தானி)**



எரிபொருள் தேவை. இருவர் (அல்லது) மூவர் பயணிக்கலாம்.

**சரக்கு உந்து**



பொருள்களை ஏற்றிச்செல்லும்.

**அவசர ஊர்தி**



உடனடி சிகிச்சை தேவைப்படுவோரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்.

**தீயணைப்பு மற்றும் மீட்பு வாகனம்**



தீயை அணைக்கப் பயன்படும்.

**ஈருருளி**



இருவர் பயணிக்கலாம்.

**மாட்டு வண்டி**



இயங்க எரிபொருள் தேவையில்லை. சுற்றுச்சூழலுக்கு உகந்தது

**மிதிவண்டி**



எளிய போக்குவரத்து வாகனம் மிதிவண்டி ஓட்டுவது உடலுக்கு நல்லது. சுற்றுச்சூழலுக்கு உகந்தது

❖ இவற்றுள் எந்த வாகனத்தை சக்தியின் குடும்பத்தினர் தேர்ந்தெடுப்பர்?

கலந்துரையாடி உங்களின் பதிலை எழுதுக. _______________________



2nd EVS_Term3_Text Book_Transport_TM.indd 81 01-10-2019 18:02:22